## மரியாதை

"மரியாதையுடனான ஒரு நாள் வாழ்க்கை அவமானத்துடன் ஓராயிரம் ஆண்டுகள் வாழ்வதைவிடச் சிறந்தது."

இது ஒரு நாடகத்தின் வசனமல்ல, மாறாக, இது முஸ்லிம்களின் சிறப்பு மிக்க வரலாற்றின் முக்கியச்செய்தியாகும். இவர் ஹஜ்ரத் ரபீ பின் ஆமிர் (ர), இறைத்தூதரின் பிரபலமான நபித்தோழர், தன்மானம் மிக்க இஸ்லாத்திற்காகத் தியாகம் செய்த முஜாஹித். ஃகாதிசியாவின் போர்க்காலத்தில் படைத்தலைவரான ஹஜ்ரத் சஅது பின் அபி வஃக்காஸ் (ர) அவர்கள் முஸ்லிம் படையினருடன் பாரசீகத்தின் பிரபல படைத்தலைவரான ருஸ்துமைஎதிர்த்துப்போரிட்டுக்கொண்டிருக்கிறார், ஆனால், ருஸ்தும் அமைதிப் பேச்சு மூலம் சமரசம் செய்ய வேண்டும் என விரும்புகிறான். ஹஜ்ரத் சஅது பின்அபி வஃக்காஸ் (ர) அவர்கள் ஹஜ்ரத் ரபீ பின் ஆமிர் (ர) அவர்களைத் தன்னுடைய பிரதிநிதியாக ருஸ்துமுடைய அரசவைக்கு அனுப்புகிறார்கள். ஹஜ்ரத் ரபீ பின் ஆமிர் (ர) அவர்கள் உடனே புறப்பட்டுவிடுகிறார்கள். தன் குதிரை மீது சவாரி செய்தவாரே ருஸ்துமுடைய அரசவைக்குச் செல்கிறார்கள். ருஸ்துமுடைய அரசவை அதிகாரிகள் ஓடிவந்து ஹஜ்ரத் ரபீ பின் ஆமிர் (ர) அவர்களைக் குதிரையிலிருந்து இறங்கி ருஸ்துமுக்கு முன்பாக கால் நடையாகச் செல்லவேண்டும் என்று கூறுகிறார்கள். ஹஜ்ரத் ரபீ பின் ஆமிர் (ர) அவர்கள் கூறுகிறார்கள், நான் தானாக இங்கே வரவில்லை, நீங்கள் தான் என்னை அழைத்தீர்கள். இவ்வாறு வருவது உங்களுக்குப் பிடிக்கவில்லையென்றால் நான் திரும்பிச்சென்றுவிடுகிறேன் என்று கூறினார். அரசவை அதிகாரிகள் பேச்சுமூச்சற்றவர்களாக மனதுக்குள்ளேயே குமுறிக் கொண்டிருந்தனர். இருப்பினும், ஹஜ்ரத் ரபீ பின் ஆமிர் (ர) அவர்களுடைய நிபந்தனையை ஏற்பதைத்தவிர அவர்களிடம் எந்த வழியும் இருக்கவில்லை. வேறு வழியின்றி அவர்களை அனுமதிக்கின்றனர். ஹஜ்ரத் ரபீ பின் ஆமிர் (ர) அவர்கள் ருஸ்துமிடம் அதே நிலையில் சென்று அவரை இஸ்லாத்தின் அழைப்பைக்கொடுக்கின்றார்கள், இஸ்லாத்தை ஏற்காத நிலையில் ஜிஸ்யா வரி செலுத்தவேண்டியிருக்கும் என்றும், அவ்வாறு செலுத்த மறுக்கும் நிலையில் போரிடவேண்டியிருக்கும் என்ற முடிவை அறிவிக்கின்றார்கள். ஹஜ்ரத் ரபீ பின் ஆமிர் (ர) அவர்கள் மிகத்தெளிவாகவும் தைரியத்துடனும் ருஸ்துமிடம் கூறினார்கள், அல்லாஹ் தஆலா எங்களை மனிதர்களை மனிதர்களின் அடிமைத்தனத்திலிருந்து விலக்கி அல்லாஹ்வை வழிபடும் மக்களாக ஒன்றிணைக்கவே அனுப்பியுள்ளான் என்று கூறினார்கள்.

பல்வேறு வேறுபட்ட கொள்கைகள் மற்றும் மதங்களின் கொடுமை மற்றும் அநீதிகளிலிருந்து மக்களுக்கு விடுதலை அளித்து இஸ்லாத்தின் நீதி

www.uzaifaibi.com

மற்றும் நியாயத்தின் அடிப்படையிலான சமூகமாக இணைத்து இறுதியில் உலகத்தின் நெருக்கடியான சுற்றுச்சூழலிலிருந்து நீக்கி மறுமையின் எல்லையற்ற விசாலமான சூழலில் சேர்க்கவேண்டும் என்பதுதான் நோக்கம். ஹஜ்ரத் ரபீ பின் ஆமிர் (ர) அவர்கள் இந்தச் சொற்கள் மற்றும் வாசகங்களை எவன் தன்னையே வணக்கத்திற்குரியவனாகக் கூறிக்கொண்டு கொடுமை மற்றும் அநீதியாளர்களின் பிரதிநிதியாகவும் உலகத்தின் நெருக்கடியான நிலைக்கு அடிமையாக்கி அல்லாஹ்வின் படைப்பினங்களை மனிதர்கள்மீது கொடுமைகளையிழைக்கும் மனப்பாங்கினைக் கொண்டிருந்தானோ அவனையே நோக்கிக் கூறினார்கள். மரியாதை மற்றும் கண்ணியம், துணிவு மற்றும் ஆற்றலுடன் எதிர்கொள்ளும் பண்பிற்கான ஏராளமான உதாரணங்களில் ஒன்றினைக் கவனிக்கவும்:

பக்தாதில் அப்பாசிய ஃகலீஃபா ஹாரூன் ரஷீத் அவர்களுடைய கம்பீரமான ஆட்சியின் காலமாக இருந்தது. அவர் தாம் குடிபெயர்ந்த நாட்டின் இமாமான ஹஜ்ரத் மாலிக் (ரஹ்) அவர்களை அழைத்துக்கூறினார்கள், தாங்கள் எங்களிடம் தொடர்ந்து வந்துகொண்டிருங்கள், ஏனெனில், எம்முடைய மகன்கள் (அமீன் மற்றும் மாமூன்) உங்களிடமிருந்து ஹதீத்ஸ்களைக் கேட்டறிய ஏதுவாக இருக்கும். இமாம் மாலிக் (ரஹ்) அவர்கள் மிகவும் மன உறுதியுடனும் தெளிவாகவும் கூறினார்கள்: அமீருல் மூனினீன் அவர்களே, அல்லாஹ் உங்களுக்கு உயர்வை அளிக்கட்டும், உண்மையில் இந்தக் கல்வி உங்கள் இல்லங்களில் சென்றடையவேண்டிய அமானிதமாகும். நீங்கள் விரும்பினால் இதற்கான உரிய கண்ணியத்தையும் அந்தஸ்தையும் அளியுங்கள், இவ்வாறே, நீங்கள் நினைத்தால் இதனை இழிவுபடுத்தி அவமதிக்கவும் செய்யலாம். தாகம் கொண்ட ஒருவன் கிணற்றை நோக்கி வருவது வழக்கம், கிணறு தாகம் கொண்டவர்களை நோக்கிச் செல்வதில்லை. ஃகலீஃபா அவருடைய துணிவான மனப்பான்மையை மெச்சியவராக தன்னுடைய மகன்களைப் பள்ளிவாசலுக்குச் சென்று பயின்று வருமாறு அறிவுறுத்தினார். இமாம் மாலிக் (ரஹ்) அவர்கள் மேலும் கூறினார்கள், ஒரு நிபந்தனை உண்டு, எங்கு இடம் கிடைக்குமோ அங்கு அமர்ந்து கொள்ளவேண்டும், அவர்களுக்காக சிறப்பு ஏற்பாடு ஒன்றும் செய்யப்படமாட்டாது. ஃகலீஃபா அவருடைய இந்த நிபந்தனையயும் ஏற்றுக்கொண்டார்.

கண்ணியமான முறையில் மரியாதையைப் பேணுவது என்பது மதிகெட்ட அல்லது கர்வமான அணுகுமுறையாகக் கருதப்படுவதில்லை, மாறாக, அது உயர்வு மற்றும் சுயமரியாதையான ஒன்றாகும், அவமானத்திலிருந்து தன்னைக் காத்துக்கொள்வதாகும். அல்லாஹ் தஆலா தன்னுடைய மூஃமினான அடியார்களிடமிருந்து அவர்கள் தலை நிமிர்ந்தவர்களாக இருக்க வேண்டும் என்றே விரும்புகிறான். தன்னுடைய சுயமரியாதையில் எவ்

www.uzairfalahi.com

வகையிலும் குறை ஏற்பட்டு விடக்கூடாது, அல்லாஹ்வைத்தவிர யாருக்கு முன்பாகவும் தலை குனியக்கூடாது. ஒரு முஸ்லிமுக்கு முன்னால் உயர்வின் ஆதாரம் அவனுடைய மார்க்கம் மற்றும் அவனுடைய இரட்சகன் மட்டுமே இருக்கமுடியும், அவர்களுக்கு முன் அவனுடைய மகிமை மற்றும் மேன்மை மட்டுமே தொடர்புடையதாக இருக்கின்றது. ஒருவர் கூறுகிறார், யார் அல்லாஹ்வை அடிபணிந்து நடக்காமலேயே மரியாதைக் குரியவராக இருக்க நினைக்கிறாறோ அல்லாஹ் அவரை இழிவுபடுத்தி விடுகிறான். ஹஜ்ரத் உமர் (ர) அவர்கள் கூறுவார்கள், நாங்கள் இழிவான வர்களாக இருந்தோம், அல்லாஹ் எங்களுக்கு இஸ்லாத்தின் பொக்கிஷத்தை அளித்தான் மேலும், எங்களுக்கு உயர்வும் மேன்மையும் அளித்தான். இந்நிலையில், எவரும் இஸ்லாத்தைப் புறக்கணித்துவிட்டு தான் மேன்மையும் மரியாதைக்குரியவனாகவும் ஆகவேண்டும் என்று நினைத்தால் அவனை அல்லாஹ் இழிவுபடுத்திவிடுவான்.

وہ زمانے میں معزز تھے مسلماں ہو کر

اور تم خوار ہوئے تارک قرآں ہو کر

*மரியாதை மற்றும் கண்ணியத்திற்குரியவனும், மாட்சி மற்றும் மகிமையின் வடிவமானவனும் அல்லாஹ் ஒருவன் மட்டுமே. அவன்தான் العزيز வல்லமையுடையோன் மற்றும் الحكيم ஞானமுடையோனாகிய அவனுடன் யார் தொடர்புடையவர்களாக இருப்பார்களோ அவர்களும் மரியாமதயுடைய வர்களாக ஆகிவிடுவார்கள். அல்லாஹ்வுடனான தொடர்பு இல்லாத நிலையில் மனிதனுடைய வாழ்க்கை அவமானம், துரதிஷ்டம்,அச்சம் மற்றும் ஊதாரித்தனத்திற்கே ஆளாகிவிடுகின்றது. ஒரு கவிஞன் கூறுகின்றான்:*

میں بھی پھروں مارا مارا چھوڑ کے تیرے دامن کو

پیڑ سے جو پتہ ٹوٹے ہے آوارہ ہو جائے ہے

மேலும், திருக்ஃகுர்ஆன் கூறுகின்றது:

قُلِ ٱللَّهُمَّ مَٰلِكَ ٱلْمُلْكِ تُؤْتِي ٱلْمُلْكَ مَن تَشَآءُ وَتَنزِعُ ٱلْمُلْكَ مِمَّن تَشَآءُ وَتُعِزُّ مَن تَشَآءُ وَتُذِلُّ مَن

تَشَآءُ ۖ بِيَدِكَ ٱلْخَيْرُ ۖ إِنَّكَ عَلَىٰ كُلِّ شَيْءٍ قَدِيرٌ ﴿٢٦﴾ (آل عمران: 26)

*பொருள்: (நபியே) நீர் கூறுவீராக, அல்லாஹ்வே, ஆட்சியதிகாரம் அனைத்திற்கும் அதிபதியே, நீ நாடுகின்றவர்களுக்கு ஆட்சியைக்கொடுக்கின்றாய். மேலும், நீ நாடுகின்றவர்களிடமிருந்து ஆட்சியைப் பறிக்கின்றாய். நீ நாடு*

www.uzairfalahi.com

*கின்றவர்களுக்கு கண்ணியத்தை அளிக்கின்றாய். மேலும் நீ நாடுகின்றவர் களை இழிவுபடுத்துகின்றாய். நன்மைகள் அனைத்தும் உன் கைவசமே உள்ளன, திண்ணமாக நீ ஒவ்வொன்றின்மீதும் பேராற்றல் கொண்டவன். (ஆலு இம்ரான்: 8)மற்றொரு இடத்தில் கூறப்பட்டுள்ளது:*

وَلِلَّهِ ٱلْعِزَّةُ وَلِرَسُولِهِۦ وَلِلْمُؤْمِنِينَ وَلَٰكِنَّ ٱلْمُنَٰفِقِينَ لَا يَعْلَمُونَ ﴿٨﴾ (المنافقون: 8)

*பொருள்: கண்ணியமானது அல்லாஹ்வுக்கும் அவனுடைய தூதருக்கும் நம்பிக்கையாளர்களுக்கும் உரியதாகும். ஆனால், இந்த நயவஞ்சகர்கள் அறிவதில்லை. (அல் முனாஃபிஃகூன்: 8)*

ஒரு முஸ்லிம் இந்த உலகில் மற்றவர்களுக்கான மென்மையான தீனியா கவோ யார் வேண்டுமானாலும் அபகரித்துக்கொள்ளும் வழியில் கிடக்கும் கேட்பாரற்றக்கண்டெடுக்கும் பொருளாகவோ இருக்கமாட்டான். துரதிஷ் டவசமாக மரியாதையின்மை மற்றும் ஏழ்மையான வாழ்க்கை, எளிமை மற்றும் முட்டாள்தனத்தின் அளவிற்கு தாழ்மை மற்றும் அடக்கமான வாழ்க் கையினை மக்கள் நேர்மை மற்றும் இறையச்சம் என்று கருத ஆரம்பித்து விட்டனர். மாறாக, ஒரு முஃமினுடைய பண்பு யாதெனில், அவன் நினைப் பவர்கள் அவனைக் காது பிடித்து தன்வசப்படுத்திக்கொள்ளும் வகையில் இலேசானவனாகவோ மலிவானவனாகவோ இருக்கமாட்டான். அவன் தன்னுடைய சுயமரியாதை, கண்ணியத்தைப் பாதுகாத்துக்கொள்பவனாக வும், தன்மானம் மற்றும் தன்னடக்கமுள்ளவனாகவும் இருப்பான். தன்னு டைய உரிமைகளை அறிந்து அவற்றைப்பாதுகாத்துக்கொள்வான் மற்றும் அதில் கண்ணும் கருத்துமாயிருப்பான். தன்னுடைய செல்வத்தை சிறந்த முறையில் பாதுகாத்துக்கொள்பவனாக இருப்பான், அவமரியாதை ஏற்ப டும் என்ற அச்சம் இருக்குமானால் எதுவாயினும் அதனைத் தவிர்த்துவிடு வான். ஒருவர் இறைத்தூதர் ﷺ அவர்களிடம் வந்து எவரும் என்னுடைய பொருளை வலுக்கட்டாயமாக அபகரிக்க முயன்றால் நான் என்ன செய்ய வேண்டும் என்று கேட்டார். இறைத்தூதர் ﷺ அவர்கள் கூறினார்கள், அவர் அதனை அபகரிக்க ஒருபோதும் இடமளிக்காதீர். அவர் கூறினார், அவன் என்னுடன் சண்டையிட முனைந்தால் என்ன செய்யவேண்டும்? கூறினார் கள், நீரும் சண்டையிடும். அவர் மீண்டும் கேட்டார், அவன் என்னைக் கொன்றுவிட்டால்? இறைத்தூதர்ﷺ அவர்கள் கூறினார்கள், இந்நிலையில் நீர் ஷஹீதானவராகக் கருதப்படுவீர். அவர் மீண்டும் கேட்டார், அவனை நான் கொன்றுவிடுவேனேயானால்? இறைத்தூதர்ﷺ அவர்கள் கூறினார் கள், அவனுடைய முடிவு நரகமாகவே ஆகிவிடும். (முஸ்லிம்)

இழிவு மற்றும் பலவீனம் ஒரு முஃமினுடைய அந்தஸ்திற்கு எதிரானவை. அவன் ஒவ்வொரு நிலையிலும் தன்னுடைய உயிர், செல்வம், மரியாதை

www.uzaifahi.com

மற்றும் தன்மானத்தைப் பாதுகாத்துக்கொள்பவனாகவே இருப்பான், இதுவே அவனுடைய மார்க்கத்தின் இன்றியமையாத பண்பும் அல்லாஹ் வின் திருப்பொருத்தத்திற்கான வழியாகவும் இருக்கும். ஒரு ஹதீத்ஸில் கூறப்பட்டுள்ளது, எவர் ஒரு செல்வந்தரிடம் அமர்ந்துகொண்டிருப்பாரோ மற்றும் உலக ஆதாயத்திற்காக இழிவான அணுகுமுறையினையும் மேற் கொள்வாரோ அவருடைய மார்க்கத்தின் மூன்றில் ஒரு பங்கு வீணாகிவிடு கின்றது மற்றும் அவர் நரகத்திற்கும் சென்றடைவார். (தப்ரானி)

ஒரு மூஃமினுடைய தன்மானம் அவரை வலுவானவராகவும் தன் உயிரை யும் தியாகம் செய்யும் அளவிற்கான தைரியமுடையவராகவும் ஆக்கிவிடு கின்றது. அவர் கஷ்டங்களைக்கண்டு பயப்படுவதற்குப் பதிலாக அவற் றைக் கட்டுப்படுத்தும் வகையிலான முயற்சிகளை மேற்கொள்கின்றார். அவர் தன்னுடைய நிலை மற்றும் அந்தஸ்தினைப் பாதுகாத்துக்கொள்வ தற்காக இரவு பகலாக ஓயாது உழைக்கும் பழக்கத்தினை ஏற்படுத்திக் கொள்கிறார். அவர் பலவீனமானவராக ஆகி மற்றவர்களிடம் உதவிகேட் டுக்கையேந்துவதைத் தவிர்த்து தைரியத்துடனும் முழு நம்பிக்கையுடனும் முயன்று தனக்கான ஒரு உலகத்தைத் தாமே உருவாக்கிக்கொள்கிறார். மேலும் அவர் மற்றவர்களுக்காக மரியாதை மற்றும் தன்மானத்தின் முன் மாதிரியாகவே தன்மை ஆக்கிக்கொள்கிறார்.

www.uzairfalahi.com

* * *